



ஜப்பானில் நடைபெற்ற 20th Asian Gamesல் 42 ஆண்டுகளுக்குப் பிறகு 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் 54.75 விநாடிகளில் இலக்கைக் கடந்து புதிய சாதனை படைத்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக ஆட்சிக்காலத்தில் அவரது திறமைக்கு துணை நிற்கும் வகையில் அரசு சார்பில் வழங்கப்பட்ட உதவிகள் ஊக்கத்தொகை உள்ளிட்டவைக் குறித்து எடுத்துரைத்து அன்பை வெளிப்படுத்தினார். அடுத்தடுத்து பல்வேறு சர்வதேச போட்டிகளில் களம் காணவுள்ள தங்கை வித்யா ராம்ராஜின் பதக்கப்பயணம் தொடரட்டும் என வாழ்த்தினார்.

தியாகி இமானுவேல் சேகரனாரின்

சமூக நீதிக்கான பங்களிப்பைப் போற்றுவோம்!

பிறந்தநாளையொட்டி – உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 11 -

விடுதலைப் போராட்ட வீரர் - தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு நேற்று பிறந்த நாளாகும்.

இந்நாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், "தியாகி இமானுவேல் சேகரனாரின் சமூக நீதிக்கான பங்களிப்பைப் போற்று வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

விடுதலைப் போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்த நாள் இன்று.

நாட்டுக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் போராடிய அவரின் பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

தியாகி இம்மானுவேல் சேகரனாரின் சமூகநீதிக்கான பங்களிப்பைப் போற்றுவோம்.

சமத்துவ சமுதாயம் அமைக்க உறுதியேற்போம்!

இவ்வாறு அவர் தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மனித குலத்தின் மேன்மைக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள

நவநீதம் பிள்ளையின் பணிகளைப் போற்றுவோம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, அக்.11-

மனிதகுலத்தின் மேன்மைக்காகவும் அமைதிக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள நவநீதம் பிள்ளை அவர்களின் பணிகளைப் போற்றுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

உலக அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தேர்வாகி இருக்கும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த திருமிகு. நவநீதம் பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



உலகெங்கும் நிறவெறி, ஒடுக்கு முறை, மனித உரிமை மீறல் போன்ற பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக துணிச்சலுடன் குரல் கொடுப்பதோடு - களப்போராட்டத்தையும் முன்னெடுத்து வரும் அவரது பணிகள் போற்றத்தக்கவை.

மனிதகுலத்தின் மேன்மைக்காகவும் - அமைதிக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள திருமிகு. நவநீதம் பிள்ளை அவர்களின் பணிகளைப் போற்றுவோம்.

அவருக்கு கிடைக்கவிருக்கும் 'நோபல் பரிசு', உலக அமைதிக்காக பாடுபட்டு வரும் ஒவ்வொருவருக்குமான ஊக்கமாக அமையட்டும்!

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

விஜய்யின் Double Action-ஐ மக்கள் கவனிக்காமல் இல்லை!

தயாநிதி மாறன் எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, அக்.11-

முதல்வர் விஜய்யின் Double Action-ஐ மக்கள் கவனிக்காமல் இல்லை என தயாநிதி மாறன் எம்.பி. தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

அக்டோபர் 10 அன்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி சென்னை வருகையாம். எல்லாருக்கும் ஏற்படும் சந்தேகம் தான் எனக்கும்.

"இரண்டு பிரதமர் வேட்பாளர்களும் சென்னையில் சந்தித்துக் கொள்வார்களா?"

அதுவும், தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கைதுக்கு, த.வெ.க. தலைவரும் வாயைத் திறக்க வில்லை.




பொத்தாம்பொதுவாக, பா.ஜ.க. என்ற சொல்லே இல்லாமல், வருடிக் கொடுக்கும் வார்த்தைகளால் த.வெ.க. வெளியிட்ட அநாமதேய ஆட்சேபனை ட்வீட்டைப் பார்த்த பின் இந்தச் சந்தேகம் மேலும் வலுக்கிறது.

தனது நாற்காலியைக் காப்பாற்றிக்கொள்ள, காங்கிரசுக்கு இரண்டு அமைச்சர் பதவிகளைத் தந்துவிட்டு, பா.ஜ.க. கோபித்துக்கொள்ளும் என்பதற்காக இந்தியா கூட்டணியில் இருந்து ஒதுங்கி இருக்கும் விஜய்யின் Double Actionஐ மக்கள் கவனிக்காமல் இல்லை.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழனாக எத்தனை நாள் இவர்களின் பொருந்தாக் கூட்டணி நீடிக்கிறது என்று பார்ப்போம். கத்தரிக்காய் முற்றினால் கடைத்தெருவுக்கு வந்துதானே ஆக வேண்டும்!

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



2026 ஆம் ஆண்டின் அமைதிக்கான

நோபல் பரிசு வென்ற தமிழ் வம்சாவளி நவநீதம் பிள்ளை!

ஜெனிவா, அக்.11-

2026ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு, தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தமிழ் வம்சாவளி சட்ட நிபுணர் நவநீதம் (நவி) பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதி மற்றும் சர்வதேச சட்டத்தை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நவநீதம் பிள்ளை 1941ம் ஆண்டு செப்டம்பர் 23ந்தேதி தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் உள்ள கிளேர்வுட் பகுதியில் பிறந்தார். இவரது தாத்தா, பாட்டி 19ம் நூற்றாண்டில் கரும்பு வெட்டும் கூலித் தொழிலாளர்களாகத் தென்னாப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்தனர்

வறுமையான குடும்பப் பின்னணியில் வளர்ந்த நவநீதம் பிள்ளையின் தந்தை பஸ் டிரைவராகப் பணியாற்றினார். பல்வேறு சவால்களுக்கு இடையிலும் கல்வியில் கவனம் செலுத்திய அவர், டர்பனில் உள்ள பில்லே நடால் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1963ல் இளங்கலைப் பட்டத்தையும் (BA), 1965ல் சட்ட இளங்கலைப் பட்டத்தையும் (LLB) பெற்றார். பின்னர், 1982ல் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சட்ட முதுகலைப் பட்டத்தையும் (LLM), 1988ல் சட்ட அறிவியல் முனைவர் பட்டத்தையும் (Doctor of Juridical Science) பெற்றார்.

இனவெறிக்கு எதிராக போராட்டம்!

தென் ஆப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி நிலவிய காலகட்டத்தில், நிறவெறியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நவநீதம் பிள்ளை சட்டப் போராட்டங்களை முன்னெடுத்தார்.

1967ம் ஆண்டு, நடால் மாகாணத்தில் சொந்தமாக சட்ட அலுவலகம் தொடங்கிய முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார். இன வெறி ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்கள், அரசியல் கைதிகள் உள்ளிட்டோருக்காக வாதாடினார்.

காவலில் இருப்பவர்களுக்கு இழைக்கப்படும் சித்ரவதைகள், தனிமைச் சிறைவாசம் மற்றும் கைதிகளின் உரிமைகள் தொடர்பான வழக்குகளிலும் அவர் தீவிரமாகச் செயல்பட்டார். 1995ம் ஆண்டு தென் ஆப்பிரிக்க உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் வெள்ளையரல்லாத பெண் என்ற பெருமையை பெற்றார்.

ருவாண்டா இனப்படுகொலை!

ருவாண்டாவில் 1994ல் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக நவநீதம் பிள்ளையை ஐ.நா. பொதுச்சபை தேர்ந்தெடுத்தது. அவர் எட்டு ஆண்டுகள் தீர்ப்பாயத்தில் பணியாறியதுடன், 1999 முதல் 2003 வரை அதன் தலைவராகவும் இருந்தார்

ருவாண்டா இனப்படுகொலை வழக்கில் பாலியல் வன்முறையும், குறிப்பிட்ட ஒரு இனக்குழுவை அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டால், அது இனப்படுகொலையின் ஒரு பகுதியாகக் கருதப்படலாம் என்பதை உறுதிப்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

இந்த தீர்ப்பு சர்வதேச குற்றவியல் சட்டத்திலும், பாலியல் வன்முறையை ஒரு கொடூர குற்றமாக அங்கீகரிப்பதிலும் முக்கிய முன்னேற்றமாக இது அமைந்தது.பின்னர், 2003 முதல் 2008 வரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றினார்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர்!

2008ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையராக நவநீதம் பிள்ளை பொறுப்பு வகித்தார்.

இந்தக் காலகட்டத்தில், பெண்களின் உரிமைகள், இனப் பாகுபாடு, ஆயுத மோதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளில் சர்வதேச அளவில் குரல் கொடுத்தார்.

1992 ஆம் ஆண்டு மனித உரிமை கட்டமைப்பில் பெண்களின் உரிமைகளை மேலும் உறுதியாக நிலைநிறுத்து வதற்காக வழக்கறிஞர்களுடன் இணைந்து ஈக்வாலிட்டி நவ் (Equality Now) என்ற அமைப்பை நிறுவினார்

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஐ.நா. சுதந்திர மான சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவராக 2021ம் ஆண்டு நவநீதம் பிள்ளை நியமிக்கப்பட் டார்.

2025ம் ஆண்டு செப்டம்பரில் வெளியான அந்தக் குழுவின் அறிக்கை, காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக முடிவு செய்தது. இந்தக் குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் நிராகரித்தது. அந்த அறிக்கை நீதிமன்றத் தீர்ப்பு அல்ல என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும், ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக மியான்மர் இனப்படுகொலை ஒப்பந்தத்தை மீறியதாக காம்பியா தொடர்ந்த வழக்கில், சர்வதேச நீதிமன்றத்தில் சிறப்பு நீதிபதியாகவும் அவர் செயல்பட்டு வருகிறார். 2019ல் முறையாக அந்தப் பொறுப்பில் நீதிபதியாக பொறுப்பேற்றார்

வறுமையான குடும்பத்தில் பிறந்து, இனவெறிக்கு எதிராகப் போராடி, சர்வதேச நீதித் துறையில் முக்கியப் பொறுப்புகளை வகித்து, தற்போது அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ள நவநீதம் பிள்ளையின் பயணம் உலகம் முழுவதும் மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

SIR தீர்ப்பை உச்சநீதிமன்றம் திரும்பப் பெற வேண்டும்!

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வலியுறுத்தல்!

புதுடெல்லி, அக். 11-


உச்சநீதிமன்றத்தில் தவறான தகவல்களைத் தெரிவித்து தேர்தல் ஆணையம் பெற்ற SIR தீர்ப்பை உச்சநீதிமன்றம் திரும்பப் பெற வேண்டும் என்று ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா வலியுறுத்தி உள்ளார்.

ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால கவுடா டெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசினார். அப்போது, அண்மையில் வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியின்படி தேர்தல் ஆணையர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவியது உறுதிப்பட்டுள்ளதாகக் கூறியுள் ளார். இதனை மறைத்து உச்சநீதிமன்றத்தில் ஆதரவான தீர்ப்பை தேர்தல் ஆணையம் பெற்றுள்ளது. உச்சநீதிமன்றத்தை தேர்தல் ஆணையம் ஏமாற்றி உள்ளது.

எனவே, SIR நடவடிக்கை என்பது தேர்தல் ஆணையர்களின் பெரும் பான்மையினரின் ஒப்புதல் மற்றும் தேர்தல் ஆணையத்தின் முழு ஒப்புதலுடன் எடுக்கப்பட்டதா என்பதை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து SIR தீர்ப்பைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் தேர்தல் ஆணையத்திடமிருந்து அனைத்து ஆவணங்களையும் வரவழைத்து ஆய்வு செய்ய வேண்டும், அதன் அடிப்படையில் தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி கோபால கவுடா வலியுறுத்தி உள்ளார்.

உச்சநீதிமன்றத்தை ஏமாற்றிப் பெற்ற தீர்ப்பு அரசியலமைப்புக்கு முரணானது என்றும் அவர் கூறியுள்ளார்.



சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின், 102ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, பரமக்குடியில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதோடு, திராவிட மாடல் ஆட்சியில் கட்டப்பட்ட மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம் மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப த. திவாகரன், உட்பட ஒன்றிய, நகர் கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.